# அவசர கூட்டப் பொருட்கள்

1. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (SWM) நாகர்கோவில் நகராட்சி வலம்புரிவிளை உரக்கிடஙகில் BIO MINING அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.24377/p3/2013 நாள். 27.04.2017 –ன் படி SWM-Preparation of Detailed Project Report for Land fill Bio Mining of existing dumpsites தயார் செய்து வழஙக ஆணையிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்.24377/2013/ P3 நாள். 30.09.2014 –ன் படி The Concern ULB are requested to release the remaining task payment as tabulated விபரம் கீழ்வருமாறு.

| Name of the ULB | Amount to be released excluding Service tax 12.36% (Rs.) | | | | |
|---|---|---|---|---|---|
| | **Submission interim report 1 st Payment** | **Submission of DPR (2nd Payment)** | **Submission of bid document 3rd Payment** | **Submission of bid process management and Bid Evaluation Report 4th payment** | **Total payment** |
| Nagercoil | 127054.00 | 127054.00 | 127054.00 | 63527.00 | 4,44,688/- |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு படி Bio Mining DPR தயார் செய்யவும், நாகர்கோவில் நகராட்சியில் Bio Mining அமைக்கவும் அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண்.21962/2015/இ3

**தீர்மான எண்: 438 – அஙகீகரிக்கப்பட்டது**

2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2016–2017–ன் கீழ் வார்டு 39–ல் வல்லன்குமாரவிளை அம்மன்கோவில் அருகில் நிழற்குடை அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதை திரு.மேகநாதன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தவறுதலாக 23.54% மதிப்பீட்டை விட குறைத்து கொடுத்துள்ளதால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.368, நாள்.31.03.2017–ன் படி மன்ற அஙகீகாரம் பெறப்பட்டது.

கோப்பு ஆய்வு செய்யப்பட்டதில் திரு.ஆர். மேகநாதன் (–) 0.02% குறைத்து கொடுத்துள்ளார். கூடுதல் வைப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை.

நகர் மன்ற தீர்மானம் எண்.368, நாள்.31.03.2017 ரத்து செய்திடவும், திட்டப்பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழஙகி பணி செய்ய நடவடிக்கை மேற்கொண்டதை அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண்.19271/2016/இ3

**தீர்மான எண்: 439 – அஙகீகரிக்கப்பட்டது**

3. இந்நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளில் குழல் விளக்குகள் , சோடியம் ஆவி விளக்குகள் CFL விளக்குகள் உட்பட மொத்தம் 17,818 தெரு விளக்குகள் உள்ளன.

மேற்கண்ட தெருவிளக்குகளுக்கு மாதாந்திர மின் கட்டணம் ரூ.35,51,067/– சராசரியாக மின் வாரியத்துக்கு நகராட்சி மூலம் செலுத்தப்படுகிறது. மேற்கண்ட தெருவிளக்குகள் LED விளக்குகளாக மாற்றும் பட்சத்தில் மாதாந்திர மின் கட்டணம் சராசரியாக 15,47,950/– செலவாகும். இதன் மூலம் மாதம் ரூ.19,53,087/– சராசரியாக சேமிப்பாகும்.

எனவே இந்நகராட்சியில் உள்ள தெரு விளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்றியமைக்க ரூ.645.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

மேலும் அரசாணை GO (MS) No.29 Municipal Administration and water supply (MA IV) Department நாள். 21.04.2017 –ன் படி 90 நகராட்சிகளில் தெருவிளக்குகளை Public Private Partnership Mode- ன் கீழ் LED விளக்குகளாக மாற்றி அமைக்க அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி அரசாணையை நகர்மன்ற அனுமதி பெற்று அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.Roc.No.35871/2014/E4 நாள்.27.04.2017–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசாணையை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.23484/2010/இ4

**தீர்மான எண்: 440 – பதிவு செய்யப்பட்டது**